## சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# பயணிகளுக்கு கட்டணமில்லா சானிட்ரி நாப்கின் வழங்கும் திட்டம்

## கோயம்பேட்டில் அமைச்சர் தொடங்கி வைத்தார்

பூந்தமல்லி, பிப்.24-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் சார்பில் அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் பெண் பயணிகளுக்கு கட்டணமில்லா சானிட்ரி நாப்கின் வழங்கும் நிகழ்ச்சி கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இதில் தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கட்டணமில்லா நாப்கின் வழங்கும் சேவையை தொடங்கி வைத்தார். அப்போது அதற்காக பிரேத்யேகமாக அமைக்கப்பட்ட எந்திரத்தில் இருந்து வந்த சானிட்ரி நாப்கினை பெண் பயணிக்கு அவர் வழங்கினார்.